செய்தி வெளியீடு – 161 நாள் 18.02.2010.

## வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கு – வணிகவரித்துறை எச்சரிக்கை.

வணிகவரித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலம் முழுவதும் மொத்தம் 29 சோதனைச் சாவடிகள் (ஊாநஉம–யீடிளவள) செயல்பட்டு கொண்டிருக்கிறது. அனைத்து சரக்கு வாகனங்களும் சோதனைச் சாவடிகளில் நின்று , பதிவு செய்து , ஆவணங்களில் முத்திரைப் பெற்ற பின்னரே, சோதனைச் சாவடியை கடந்து செல்ல வேண்டும். சில சரக்கு வாகனங்கள் சோதனைச் சாவடிகளை கடந்து செல்லும் போது, சோதனைச் சாவடிகளில் நிற்காமல் செல்வதாக புகார்கள் வந்துக் கொண்டிருகின்றன.

சோதனைச் சாவடியில் நிற்காமல் செல்லும் இந்த வாகனங்களை, வணிகவரித் துறை அதிகாரிகள் வேகமாக பின் தொடர்ந்து சென்று, பிடிக்கும் பொழுது விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, சோதனைச் சாவடிக்கு அருகில் சரக்கு வாகனங்களை நிறுத்தி, சரக்குகளுக்குரிய ஆவணங்களை ஆய்விற்காக காண்பித்து, கட்டாயம் சோதனைச் சாவடி முத்திரை பெற்றபின்புதான் செல்ல வேண்டும் என வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு முத்திரை பெறாமல், சரக்கு வாகனங்கள் சென்றால், 2006 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கபடுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை,
சென்னை – 600 009.